15.03.2024

O.S.No.253/2022

வா.சா.1 .திரு.திருமணி த.பெ.முருகேசன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி எனது சகோதரி என்றால் சரிதான். இந்த வழக்கு விவரங்கள் நான் மட்டும் எங்களது வழக்கறிஞரிடம் சொல்லி எனது பிராது மற்றும் நிருபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டன என்றால் சரியல்ல, என்னோடு சேர்ந்து 2 முதல் 4 வாதிகளும் கூறிய விவரங்களின் அடிப்படையில் அவைகள் தயார் செய்யப்பட்டன. 2 முதல் 4 வாதிகளுக்கும் வழக்கு விவரங்கள் நன்கு தெரியும் என்றாலும்,அவர்களையும் நான் விசாரிக்கலாம் என்றாலும் சரிதான். 2ம் வாதி எனது இறந்தபோன சகோதரரான ஜோதிமணியின் மனைவி, 3ம் வாதி அவரது மகள், 4ம் வாதி அவரது மகன் ஆவார்கள். இந்த வழக்கு என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கிடை சொத்தில் பிரதிவாதிகள் நுழையக்கூடாது என பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து விவரம் என்னவென்றால் சர்வே எண்.36/2A, 36/2B2 ஆகியவைகளுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் நான்குமால் எனக்கு தெரியும்.

2.வா.சா.ஆ-1 ஆவணத்தின் படி சில சொத்துக்கள் எனக்கு தனித்து பாத்தியப்பட்டதாகவும் சில சொத்துக்கள் 2 முதல் 4 வாதிகளுக்கு தனிது பாத்தியப்பட்டதாகவும் காணப்படுகிறது என்றால் சரிதான், “B” செட்டியுல் சொத்து எனக்கு பர்த்தியப்பட்டதாகவும் C செட்டியுல் சொத்து எனது சகோதரர் ஜோதிமணி குடும்பத்திற்கு பாத்தியப்பட்டதாகவும் காணப்படுகிறது. அவரவர்கள் சொத்தினை பொறுத்து எந்த விதமான வழக்குமூலம் எழுந்துள்ளதோ அதற்காக அவரவர்கள் தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரிதான், தாவா சொத்து எனது பாகமான B செட்டியுல் சொத்திலும் 2 முதல் 4 வாதிகள் பாகமான “C” செட்யுல் சொத்திலும் சேர்ந்து அமைந்துள்ளதால் நாங்கள் சேர்ந்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம். நான் தாக்கல்செய்துள்ள வா.சா.ஆ-1 ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள சொத்து விவரங்களின் படி நானும், மற்ற வாதிகளும் சேர்ந்து தாவாசொத்தினை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல.

3. 2 முதல் 4 வாதிகள் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எந்தவித விவரங்களும் அளிக்கவில்லை என்றாலும், நானாகத்தான் அவர்களையும் சேர்த்து இந்த வழக்கினை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அவர்கள் சம்மதத்தின் பேரில்தான் இந்த வழக்கினை நடத்தி வருகிறேன். மற்ற வாதிகளும் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று எண்ணியிருந்தால் அவர்களுக்குள்ள சொத்தினை பொறுத்து தனியாக வழக்கினை தாக்கல் செய்திருப்பார்கள் என்றாலும், அவ்வாறு மற்ற வாதிகள் தாவா சொத்தினை பொறுத்து வழக்கு தாக்கல் செய்ய சம்மதம் எதுவும் தெரிவிக்காததால்தான் தனியாக வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மற்ற வாதிகள் இந்த வழக்கினை நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்களா என்பதனை காட்டுவதற்கு மற்ற வாதிகளை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான், அவர்களை நான் விசாரித்த தயாராக

உள்ளேன் என்றால் தேவைப்பட்டால் விசாரித்த தயாராக உள்ளேன். எனக்கு 3 குழந்தைகள் உள்ளனர். 1ம் பிரதிவாதியின் மகளை எனது 2வது மகனுக்கு திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான்.

4. நான் ஊரக வளர்ச்சித்துறையில் சிரஸ்தாராக இருந்து பணி ஓய்வுபெற்றுள்ளேன். வா.சா.ஆ-1 ஆவணத்தில் தாவாசொத்தின் சர்வே எண் உள்ளதா என்றால் B செட்டியூல் சொத்தில் 2வது இலக்க சொத்தாக சர்வே எண்.36/5Bல் 1 ஏக்கர் 4 செண்டில் மேல்புறம் 52 செண்டு எனவும் C செட்யுலில் 2வது இலக்க சொத்தில் சர்வே எண்.36/5Bல் 1 ஏக்கர் 4 செண்டில் கீழ்புறம் 52 செண்டு என உள்ளது. அதே போல் வா.சா.ஆ-2 ஆவணத்தில் தாவாசொத்து உள்ளதா என்றால் 6ம் இலக்க சொத்தாக உள்ளது. மொத்த சொத்தாக சர்வே எண்.36/5Bல் 1 ஏக்கர் 4 செண்டு என காட்டப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பிராதின் சொத்து விவரத்தில் சர்வே எண்.36/5B என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் நான் தற்போதைய சர்வே எண்.36/2A மற்றும் சர்வே எண்.36/2B2 ஆகியவற்றை குறிப்பிட்டுள்ளேன். சர்வே எண்.36/2A மற்றும் சர்வே எண்.36/2B2 ஆகியவை சர்வே எண்.36/5Bக்கு உண்டானவை என்பதனை காண்பிப்பதற்கு ஆவணம் எதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

5. எனது வழக்குப்படி சர்வே எண்.36/5B ல் கட்டுப்பட்ட சொத்துதான் இந்த வழக்கு சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ- 1 மற்றும் வா.சா.ஆ-2 ஆகியவற்றில் தாவா சொத்தின் சர்வே எண் காணப்படவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக வேறு சர்வே எண்ணை குறிப்பிட்டு, அதில் அடங்கியுள்ள சொத்துதான் சர்வே எண்.36/5B-க்கான சொத்து என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.36/5Bக்கு உண்டான முந்தைய சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.152/5B ஆகும். சர்வே எண்.152/5B ன் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 54 செண்டு என்றால் சரியல்ல, 1 ஏக்கர் 56 செண்டு ஆகும். சர்வே எண்.152/5Bல் கட்டுப்பட்ட சொத்து எனது குடும்பத்திற்கு எவ்வாறு கிடைக்கப்பட்டது என்றால், எனது தாத்தா பூங்காவனம் பிள்ளை கிரையம் பெற்ற சொத்தாகும். அதில் கண்ட மொத்த சொத்தும் எனது தாத்தா கிரையம் வாங்கினார் என்றால் சரிதான்.

6. சர்வே எண்.152/5Bல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் நிலத்தினை மட்டும்தான் எனது தாத்தாவும், அரவது முன்னோர்களும் 1950ம் ஆண்டு கிரையம் பெற்றார்கள் என்றால் சரியல்ல. மீதமுள்ள 54 செண்டை பொறுத்த வரை எனது தகப்பனார் முருகேசன் 1980ம் ஆண்டு பத்திர எண்.215/1980 மூலமாக கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. மேற்படி கிரைய பத்திரத்தின் அடிப்படையில் சர்வே எண்.152/6ல் கட்டுப்பட்ட 36செண்டையும் சேர்த்து மொத்தம் 90 செண்டு நிலம் எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல, அதற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. சர்வே எண்.152/5B என்பது யுடிஆர்திட்டத்தின் கீழ் சர்வே எண்.36/5B என மாறியது என்றால் எனக்கு சரியாக தெரியாது. சர்வே எண்.36/5B ஐ பொறுத்து எங்கள் குடும்பத்தினரிடையே 1967ம் ஆண்டு பாகபிரிவினை ஏற்பட்டது என்றால் வருடம் நினைவில்லை, ஆனால் 1970ம் ஆண்டுக்கு முன்பு பாகபிரிவினை ஏற்பட்டது. சர்வே எண்.36/5B ல் கண்ட 1 ஏக்கர் சொத்து எனது தகப்பனார் உடன்பிறந்த

சகோதரர் கந்தசாமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கந்தசாமிக்கு பாகம் ஒதுக்கிய பின்பு அந்த சொத்து சர்வே எண்.36/5B1 என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை. மீதமுள்ள 54 செண்டை பொறுத்த வரையில் முருகேசன் பெயருக்கு சர்வே எண்.36/5B2 என உட்பிரிவு செய்யப்பட்டது தாக்கலாகி உள்ளது என்றால் சரியல்ல, வழக்கிடை சொத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

7. கந்தசாமி என்பவர் தனக்கு பாகமாக கிடைக்கப்பட்ட சர்வே எண்.36/5B1 ல் கட்டுப்பட்ட 1 ஏக்கர் நிலத்தினை 3 ம்நபருக்கு ஆவண எண்.1348/1993 ன் படி விற்கிரையம் செய்துவிட்டார் என்றால் இருக்கலாம் என்று சாட்சி கூறுகிறார். அதே போல் எனது தகப்பனார் முருகேசன் சர்வே எண்.36/5B2 ல் கட்டுப்பட்ட 54 செண்டு மற்றும் சர்வே எண்.36/6 ல் கட்டுப்பட்ட 36 செண்டு ஆகியவற்றினை ஆவண எண்.264/2002 ன் படி 3 ம்நபருக்கு பவர் பத்திரம் எழுதி கொடுத்து விற்கிரையம் செய்து விட்டார் என்றால் சரியல்ல, இந்த வழக்கிற்கும், அந்த சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. மேற்படி ஆவணப்படி எனது தகப்பனார் மேற்கூறியவாறு 90 செண்டு நிலத்தினை விற்பனை செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அதில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அந்த சொத்திற்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை. எனது நிருபண வாக்குமூலத்தில் சர்வே எண்.36/5B ல் கட்டுப்பட்டுள்ள சொத்துதான் தாவா வழக்கிடை சொத்து என்று கூறியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல, அதுதான் சரி. சர்வே எண்.36/5B ல் கட்டுப்பட்ட சொத்தினை பொறுத்து கந்தசாமியும், எனது தகப்பனாரும் தனித்தனியாக விற்கிரையம் செய்து விட்டதால் தாவா சொத்திற்கும் சர்வே எண்.36/5B ல் கட்டுப்பட்ட சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. (குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)